**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**அவசரக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 24.01.2023 செவ்வாய் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா,M.Com.,**
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>01</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் குப்பை சேகரிக்கும் பணிகளை Service Provider/Agency/Contractor மூலம் மூனறாண்டுகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35295/2022/EA2 SWM 2.0 Dated 10.01.2023-ல் கீழ்க்காணும் விவரப்படி நிபந்தனைகளுடன் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.
<table>
<tr><th rowspan="2">Name of the Municipality</th><th rowspan="2">Quantity of Waste Generated (TPD)</th><th rowspan="2">Rate per Tonne (in Rs.)</th><th>Estimated Base Cost per day</th><th>Estimated Base Cost per Year</th><th>Applicable GST 18% and LWF 1%</th><th>Estimated total Cost per year</th></tr>
<tr><th colspan="4">(Rs. in Lakhs)</th></tr>
<tr><td>Thiruthurai poondi</td><td>7.77</td><td>5,294.72</td><td>0.41</td><td>149.65</td><td>28.43</td><td>178.08</td></tr>
</table>
</td><td>01</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிக்கான செலவினத்தை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், நகராட்சி நிதி பற்றாக்குறை ஏற்படின் 15-வது மத்திய நிதிக்குழு மான்யத்தில் (15th CFC SWM Tied Grand) பயன்படுத்திக் கொள்ளவும், மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெற்று ஓர் ஆண்டிற்கு பணி உத்தரவு வழங்கி அந்நிறுவனத்தின் செயல்திறன் ( Performance Satisfaction) திருப்திகரமாக இருக்கும் பட்சத்தில் அடுத்த இரண்டாவது மற்றும் மூன்றாவது ஆண்டுகளுக்கு மன்ற அனுமதியுடன் ஒப்பந்த காலத்தை நீட்டித்து வழங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான நாளிதழ் விளம்பர செலவினத்தினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்<br>**2.** நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.35295/ 2022/EA2 SWM 2.0 Dated 10.01.2023-ல் தெரிவிக்கப் பட்டுள்ள வழிகாட்டுதலின்படியும், நிபந்தனை களின்படியும் செயல்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண். 2913/2022 /எச்1)** | | |

ஒம்/ **பா கவிதா,**
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

/உண்மை நகல்/

**திருத்துறைப்பூண்டி நகராட்சி**

**இயல்பு கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.01.2023 செவ்வாய் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை : திருமதி.பா. கவிதா, M.Com.,**

தலைவர்,

திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>01</td><td>நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி-2023 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.</td><td>2</td><td>பதிவு செய்யப்பட்டது</td></tr>
<tr><td>02</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட நிவாரண முகாம்களில் மழையால் பாதிக்கப்பட்ட மக்களை தங்கவைப்பதற்கு ஏதுவாக நிவாரண முகாம்களில் ஜெனரேட்டர் வாடகைக்கு அமர்த்திக் கொள்ளும் பணி மேற்கொள்ள 08.12.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>நாள் ஒன்றுக்கு ஜெனரேட்டர்வாடகை ரூ.</th></tr></table></td><td>3</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>M/S.பட்டு எலக்ட்ரிக்கல்ஸ்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="3">ரூ.14000 /-</td><td>ரூ.3500/-</td></tr>
<tr><td>2</td><td>M/S.ரேவதி சவுண்ட்சர்வீஸ்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.3750/-</td></tr>
<tr><td>3</td><td>M/S.ஜோசப் எலக்ட்ரிக்கல்ஸ்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.3600/-</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u>
<ol>
<li>வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட ஒரு நாளைக்கு ஜெனரேட்டர் வாடகை ரூ.3500/-க்கு குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.பட்டு எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்த தாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மா.ந.ச.1920 பிரிவு-15ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்.966/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>03</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலைகள் பழுதடைந்து போக்குவரத்திற்கு இடையூராக பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே மேற்படி சாலைகளை தற்காலிகமாக சீரமைக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, நிர்வாக நலன் கருதி மேற்படி சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ள 12.12.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு<br>ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி<br>மதிப்பீடு<br>ரூ.</th></tr>
</table>
</td>
<td>4</td>
<td>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>M/S.மங்கையர்க்கரசி<br>கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="3">ரூ.416510 /-</td><td>ரூ.419100/-</td></tr>
<tr><td>2</td><td>திரு.கண்ணன்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.416308/-</td></tr>
<tr><td>3</td><td>திருமதி.மாரியம்மாள்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.433400/-</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u>
<br>
1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.05 சதவீதம் குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள திரு.கண்ணன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மா.ந.ச.1920 பிரிவு-15ன் கீழ் தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
<br>
<u>ந.க.எண்.966/2022/இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>04</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் குடிநீர் விநியோகம் கொள்ளிடம் கூட்டு குடிநீர் திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு 1.80 MLD பெறப்பட்டு 10 வெவ்வேறு இடத்தில் இருக்கும் மேல்நிலை தொட்டிகளில் ஏற்றப்பட்டு 40 கி.மீ. நீளமுள்ள D-Line மூலம் 2838 எண்ணிக்கையிலான இணைப்புகளுக்கு தினசரி குடிநீர் வழங்கப்படுகிறது. 17 எண்ணிக்கையிலான மினி பவர் பம்ப், 144 எண்ணிக்கையிலான பொதுக் குழாய்கள், 51 எண்ணிக்கையிலான கைப்பம்புகள், இரண்டு Open Well மற்றும் 5 கைப்பம்புகள் போன்றவை தினசரி இயக்குதல் மற்றும் பராமரிப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவற்றுக்கு ஒரு பம்ப் மெக்கானிக் மட்டுமே உள்ளார். மேற்காணும் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிக்கு ஆட்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் மூலம் தயார் செய்யப்பட்ட பராமரிப்பு பணிக்கு Outsourcing முறையில் ஆள் எடுக்க காலதாமதம் ஆகும் சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை கடித எண் 5391/2005/எப்1 நாள் 28.01.2005ன்படி</td>
<td>5</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | Water Source Distribution பணிக்கு 4 நபர்கள் முற்றிலும் தற்காலிகமாக Outsourcing முறையில் PWD schedule rate-ன்படி ஒப்பந்த அடிப்படையில் 12 மாத காலத்திற்கு கீழ்க்காணும் விவரப்படி உத்தேச செலவினம் ரூ.12,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br><br><u>ந.க.எண்.183/2023/இ1</u> | | |
| **05** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்படி பணிகளை மேற்பார்வையிட பணி ஆய்வர் பணியிடம் இல்லை.<br><br>மேலும் அவ்வப்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் ஆகிய உயர் அலுவலர்களிடம் இருந்து அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகள், புள்ளி விவரங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு போதிய பணியாளர்கள் இல்லை.<br><br>மேலும் தற்பொழுது இந்நகராட்சியில் நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணிகளை மேற்பார்வையிடவும், அறிக்கைகள் தயார் செய்யவும் தொழில் நுட்ப பணியாளர்கள் தேவைப்படுகிறது. எனவே, பணியின் அவசர அவசியம் கருதி தொழில்நுட்ப உதவியாளர் 3 நபர்களும் கணிணி இயக்குபவர் 1 நபரும் ஒப்பந்த அடிப்டையில் தற்காலிகமாக PWD (Schedule of rate) 2022-2023 வரையறுக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை கடித எண் 5391/2005/எப்1 நாள் 28.01.2005ன்படி வழங்கப்பட்ட வழிகாட்டுதலின்படி 12 மாத காலத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க அனுமதிக்கும். அடுத்து வருகிற 12 மாத காலத்திற்கு முற்றிலும் தற்காலிகமாக Contract Basis அடிப்படையில் அதற்குரிய EPF தொகையுடன் | **6** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>நியமித்து கொள்ளவும் 12 மாத உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.15,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட அலுவலக நடைமுறையை மன்றம் ஏற்கலாம்.<br><br><u>ந.க.எண்.183/2023/இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>06</td>
<td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரி மற்றும் வரியில்லா இனங்களின் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு அறிவிப்பு வாசகத்தை ஆட்டோ ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் , கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின்அனுமதிக்கும் பார்வைக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><td>வ.எண்.</td><td>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனத்தின் விபரம்</td><td>ஒரு நாள் வாடகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>தேவா பப்ளிசிட்டி, திருத்துறைப்பூண்டி.</td><td>2300/-</td></tr>
<tr><td>2.</td><td>ஹரீஷ் பிரபு பப்ளிசிட்டி, திருத்துறைப்பூண்டி.</td><td>2400/-</td></tr>
<tr><td>3.</td><td>அம்மன் விளம்பர நிறுவனம், திருத்துறைப்பூண்டி.</td><td>2500/-</td></tr>
</table>
</td>
<td>7</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>2. குறைவான விலைப்புள்ளி வழங்கிய தேவா பப்ளிசிட்டி, திருத்துறைப்பூண்டி. நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம். மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண்.245/2020/அ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>07</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொதுநிதி 2022-2023-ன்கீழ் குடிநீர் பணியாளர்கள் 4 நபர்கள் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்திட ரூ.11.12 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் விநியோகம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு 25.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr><tr><td>1</td><td>திரு.வ.திருமலை வாசன்</td><td rowspan="2">1112400.00</td><td>1112400.00</td><td>மதிப்பீட்டு சமம்</td></tr><tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>1296000.00</td><td>16.50 சதவீதம் அதிகம்</td></tr></table></td><td>8</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுக்கு சமமான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.வ.திருமலைவாசன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br><br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br><u>ந.க.எண்.183/2023,இ1</u></td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>08</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொதுநிதி 2022-2023-ன்கீழ் பொறியியல் பிரிவில் தொழில் நுட்பபணியாளர் 3 நபர்கள் மற்றும் கணிணி இயக்குபவர் 1 நபர் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் நியமனம் செய்திட ரூ.14.19இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு 25.01.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.ப.குணவசந்தன்</td><td rowspan="2">ரூ.1419300.00</td><td>ரூ.1419300.00</td><td>மதிப்பீட்டு சமம்</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்</td><td>ரூ.1432800.00</td><td>0.95 சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு:</u></td>
<td>9</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
1. வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுக்கு சமமான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.ப.குணவசந்தன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br>
<u>ந.க.எண்.183/2023,இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>09</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகளை தீபாவளி சிறப்புமலர் 2021ல் விளம்பரம் செய்யப்பட்டது மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவுற்றதை தொடர்ந்து ஓராண்டு சாதனைகளை மாலை முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கும், இந்நகராட்சி திட்டப்பணிகள் மற்றும் சாதனைகளை தினத் தந்தி தொழில் மலரில் விளம்பரம் செய்யப்பட்டதற்கும் உரிய கட்டணத் தொகை கீழ்காணும் விவரப்படி விளம்பர நிறுவனத்திடம் இருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி, விளம்பர கட்டணத்தினை நிர்வாக நலன் கருதி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிவேண்டடப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விளம்பரம் வெளியிடப் பட்ட நாள்</th><th>கட்டணத் தொகை ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>மாலை முரசு (தீபாவளி சிறப்புமலர் 2021)</td><td>02.11.2021</td><td>9975</td></tr>
<tr><td>2.</td><td>மாலைமுரசு (முதலமைச்சரின் ஓராண்டு சாதனைகள்)</td><td>20.05.2022</td><td>16406</td></tr>
</table>
</td>
<td>10</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>3</td><td>தினத் தந்தி தொழில் மலர்-2022</td><td>04.10.2022</td><td>37653</td></tr>
<tr><td></td><td></td><td>கூடுதல்</td><td>64034</td></tr>
</table>
<br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம்அனுமதிவழங்கலாம்.
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>10</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு கழிவு நீர் வாகனம் எண்.TN-50AX-6429 வாகனத்தின் சாலை வரி 31.12.2022 உடன் முடிவடைவதால் அதனை புதுப்பித்து வழங்க வேண்டி திரு.மு.சிற்றரசன், ஓட்டுநர், திருத்துறைப்பூண்டி நகராட்சி அவர்களால் 28.01.2023 அன்று விண்ணப்பம் வழங்கப்பட்டது. அதன்படி, கழிவுநீர் வாகனத்தின் சாலைவரி செலுத்துவதற்கு உரியகட்டணத் தொகை ரூ.7686/-ஐ பொது நிதியிலிருந்து மெற்கொள்ள நகர் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u> மன்றம்அனுமதிவழங்கலாம்.<br><br><u>ந.க.எண்.2707/2022/இ1</u></td>
<td>11</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>11</td>
<td>திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு பொறியாளர் அறையின் தரையினை செப்பணிடவும் மற்றும் கழிவறைக்கு செல்லும் பாதையினை தடுத்து பராமரிப்பு பணிகள் செய்யவும் கதவுகள் பராமரித்தல் மற்றும் வர்ணம் பூசும் பணி மேற்கொள்வதற்கு 25.01.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எ ண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
</table>
</td>
<td>12</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>எஸ்.பாலசுப்பிரமணியன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">ரூ.61314 /-</td><td>ரூ.61279/-</td><td>0.06 சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>எஸ்.விஜயகுமாரி,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.61892/-</td><td>0.94சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட ரூ.0.06 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், திருத்துறைப்பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.
<u>ந.க.எண்.3094/2023,இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>12</td>
<td>
திருத்துறைப்பூண்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட மதிப்பீட்டில் குறிப்பிடப் பட்டுள்ள 12 இடங்களில் பழுதடைந்த ஆழ்துளை கிணறுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தி நிலத்தடி நீரினை மேம்படுத்தும் பணி மேற்கொள்வதற்கு 25.01.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர்பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.பாலசுப்பிரமணியன்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.194152/-</td><td>ரூ.194060/-</td><td>0.05சதவீதம்குறைவு</td></tr>
</table>
</td>
<td>13</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி,<br>திருத்துறைப்பூண்டி</td><td></td><td>ரூ.194412/-</td><td>0.13சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<br>
<u>அலுவலக குறிப்பு:</u>
<ol>
<li>வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட ரூ.0.05சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ்.பாலசுப்பிரமணியன், திருத்துறைப் பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி யினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்ட இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அங்கீகரிக்கலாம்.</li>
</ol>
<u>ந.க.எண்.1071/2022,இ1</u>
</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>13</td>
<td>
அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடியும், குத்தகை விதிமுறைகளின் படியும், திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள பல்வகைப்பட்ட குத்தகை இனங்களை 2023-2024 முதல் 2025-2026 வரை(01.04.2023 முதல் 31.03.2026 வரை) மூன்றாண்டுகளுக்கு பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், இந்நிகழ்விற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வரிசை எண்</th><th>குத்தகைஇனம்</th></tr>
<tr><td>1.</td><td>பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கும் மற்றும் இரவில் தங்கும் பேருந்துகளுக்கும் நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.</td></tr>
</table>
</td>
<td>14</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | 2. பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்து கொள்ளும் உரிமம்.<br><br>3. பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தின் கிழக்கு பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள வாடகை கார் நிறுத்துமிடத்தில் வாடகைகார்களுக்கு அனுமதி கட்டணம் வசூலிக்கும் உரிமம்.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>**2.** பொது ஏலம் /ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை உள்ளூர் அச்சகங்களில் தேவையான எண்ணிக்கை பிரிண்ட் செய்து கொள்ளவும், அதனை ஏதாவது ஒரு முன்னனி தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் இது தொடர்பான செலவினங்களை வருவாய் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><u>ந.க.எண். 245 /2023/அ2</u> | | |

ஒம்/பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/